பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 05 2026 WEDNESDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நிலக்கரி வாயுவாக்கத்தை ஊக்குவிப்பதற்கு வகை செய்யும் 37 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு த.வெ.க. அரசு செயல்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

3. த.வெ.க. அரசு மீது மக்களுக்கு நம்பிக்கை குறைந்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. தென்மேற்கு பருவமழை வரும் சனிக்கிழமை தொடங்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

5. ஆசிய பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Gyaneshwari Yadav ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>><<<<<

நிலக்கரி வாயுவாக்கத்தை ஊக்குவிப்பதற்கு வகை செய்யும் 37 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதனை செய்தியாளர்களிடம் தெரிவித்த தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ், ஏழரை கோடி டன் நிலக்கரியை வாயுவாக்குவதற்கு இந்த திட்டம் வகை செய்வதாக கூறினார்.

இதற்கான திட்டங்களுக்கு 20 சதவீத நிதி ஊக்கத்தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் மூலம் 3 லட்சம் கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்படும் என்றும், 50 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

நடப்பு பருவத்தில், 14 பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவதற்கும் இக்கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை, ரகத்திற்கு ஏற்றவாறு குவிண்டாலுக்கு 2 ஆயிரத்து 441 ரூபாயாகவும், 2 ஆயிரத்து 461 ரூபாயாகவும் உயர்த்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

சூரியகாந்தி விதைக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 622 ரூபாயும், பருத்திக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு 557 ரூபாயும் உயர்த்தப்படுவதாக திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

>>>>><<<<<

மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு த.வெ.க. அரசு செயல்படும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

இன்று சட்டப்பேரவையில் தமது அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற பிறகு உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

த.வெ.க. அரசு பதவிக்காகவும், அதிகாரத்திற்காகவும் அமைந்ததல்ல என்று அவர் கூறினார்.

நம்பிய மக்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக அமைந்த அரசு என்றும் அவர் தெரிவித்தார்.

தமது அரசு யார் மீதும் வெறுப்பு காட்டாது என்றும், அனைவரையும் விரும்பும் அரசு என்றும் முதலமைச்சர் கூறினார்.

மக்களாட்சிக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. விஜய் தெரிவித்தார்.

முன்னதாக, நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீது பங்கேற்றுப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின், 65 சதவீத மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு ஆட்சியின் மீது, தங்களுக்கு மட்டுமல்ல த.வெ.க-வுக்கு வாக்களித்த மக்களுக்கும் நம்பிக்கை குறைந்து வருவதாக கூறினார்.

பெரும்பான்மை இல்லாத, அரசியல் அடிப்படை நேர்மையும் அல்லாத த.வெ.க. அரசு நல்லாட்சி தரும் என்றும், தமிழக மக்களின் உரிமைக்காக போராடும் என்ற நம்பிக்கையும் மக்களுக்கு துளியும் இல்லை என்று திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

நம்பிக்கை கோரும் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் திமுக வெளிநடப்பில் ஈடுபட்டது.

அஇஅதிமுக எதிர்த்து வாக்களித்தது. அக்கட்சியின் அதிருப்தி உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

பிஜேபியும், பாமகவும் நடுநிலை வகித்தன.

இதன் காரணமாக, நம்பிக்கை கோரும் தீர்மானத்திற்கு ஆதரவாக 144 வாக்குகளும், எதிராக 22 வாக்குகளும் பதிவாகின.

இன்றைய நடவடிக்கைகளுக்குப் பின்னர் பேரவை மறுதேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

>>>>><<<<<

முதலமைச்சர் அலுவலகத்தின் சிறப்பு அதிகாரியாக திரு. Rickey Radhan Pandit Vetrivel நியமிக்கப்பட்டதை தமிழக அரசு திரும்ப பெற்றுக் கொண்டது, வரவேற்கத்தக்கது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த பணிநியமனத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று பல தரப்பிலிருந்து கோரிக்கை விடுக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

விமர்சனங்களுக்கு செவி சாய்த்து, அதன்மீது நடவடிக்கை எடுத்துள்ள த.வெ.க அரசின் ஜனநாயக பண்பு பாராட்டுதலுக்குரியது என்றும், இந்த அணுகுமுறை தொடர வேண்டும் என்றும் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி. பிரேமலதா விஜயகாந்த்-ம் தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சட்டப்பேரவையில் இதுகுறித்து தாம் எடுத்துரைத்ததை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை ஏற்று நடவடிக்கை எடுத்ததற்காக முதலமைச்சருக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதாகவும் திருமதி. பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

>>>>><<<<<

தென்மேற்கு பருவமழை வரும் சனிக்கிழமை தொடங்க வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>><<<<<

தமிழகத்தில் 25 ஆதார் சேவை மையங்களை திறக்க திட்டமிட்டுள்ளதாக தனித்துவ அடையாள ஆணையத்தின் பெங்களூரு மண்டல இயக்குநர் திரு. பவன்குமார் பஹூவா கூறியுள்ளார்.

வேலூர் மாவட்டம், விருதுபட்டில் ஆதார் சேவை மைய திறப்பு விழாவில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

சென்னை, மதுரை, திருநெல்வேலி, கிருஷ்ணகிரிக்கு பிறகு தற்போது வேலூரில் இந்த மையம் தொடங்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

ஆதார் பதிவு, பயோமெட்ரிக் புதுப்பித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான சேவைகள் இதில் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

5 முதல் 17 வயதுக்குட்பட்டோருக்கான கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தல், செப்டம்பர் மாதம் வரை கட்டணமில்லாமல் மேற்கொள்ளப்படும் என்று திரு. பவன்குமார் பஹூவா கூறினார்.

>>>>><<<<<<

கொடைக்கானலில் கோடை சீசன் தொடங்கியுள்ள நிலையில், பிரையன்ட் பூங்காவிற்கான அனுமதி நேரம் இரவு 7 மணிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இது சுற்றுலா பயணிகளிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

மயிலாடுதுறை மாவட்டத்தில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் விவசாயிகள் தங்களது நிலஉடமை விவரங்களை உடனடியாக பதிவு செய்யுமாறு ஆட்சியர் திரு. ஸ்ரீகாந்த் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>><<<<<<

திருப்பூர் மாவட்டம், கரட்டுப்பதி மற்றும் திட்டுப்பாறை பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டு செயல் திட்டத்தின் கீழ், 120 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் வழங்கப்பட்டன.

>>>>><<<<<<

தெற்கு ரயில்வேயின் முதன்மை தகவல் தொடர்பு அதிகாரியாக திரு. S.N. Narain இன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Gyaneshwari Yadav ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றார்.

குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கங்களை கைப்பற்றினார்.

>>>>><<<<<<

இஸ்தான்புல்லில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Payas Jain காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 11-12, 12-14, 11-9, 11-9 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் Kay Stumper-ஐ வென்றார்.

>>>>><<<<<<

தாய்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>END<<<<<<